2010 ஏப்ரல் 15]

43—

ஆராய்ச்சி மருத்துவ நிலையம்

***64332—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் உயர் ஆராய்ச்சி மருத்துவ நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையை மைய அரசின் பிரதம மந்திரி சுவஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.150 கோடி செலவில் அகில இந்திய மருத்துவ அறிவியல் மையத்திற்கு இணையாகத் தரம் உயர்த்த, மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.25 கோடியாகும். இதற்கான நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மைய அரசின் நிறுவனம் கட்டடப் பணிகளைத் தொடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.*

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் என்பது தென் மாவட்டங்களுடைய தலைநகரமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே வெள்ளையர் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட அரசு இராஜாஜி மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த ஆஸ்பத்திரிக்கு நாளொன்றுக்கு சுமார் 10 ஆயிரம் வெளி நோயாளிகள் வருவதோடு, 2 ஆயிரம் உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இது போக, பக்கத்தில் உள்ள சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மக்களும் சிகிச்சைக்காக அங்கே வருகின்றார்கள். சமீபத்தில் வேகமாகப் பரவிய சிக்-குன்-குன்யா, டெங்கு, பன்றிக் காய்ச்சல், H1N1, M1N1 இன்னும் பெயர் தெரியாத வியாதிகளாலும் மக்கள் பாதிப்படைகின்றார்கள். இதுபோன்ற வைரஸ் கிருமிகளால் மக்கள் பாதிப்படையாமல் இருக்க, புனே,

அகமதாபாத், பெங்களூரு போன்ற நகரங்களில் இருக்கின்ற மாதிரி All India Institute of Medical Sciences நிலையில் உயரிய மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தை மதுரையில் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம மந்திரியின் சுவஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.150 கோடி செலவில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்திற்கு இணையாக அமைத்திட முடிவு செய்யப்பட்டு, கடந்த 27-2-2009 அன்று மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கட்டடம் கட்டும் பணிகளெல்லாம் முடிக்கப்பட்டு, அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது. அவருடைய கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை கடும் மின்வெட்டுப் பிரச்சினையால் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றது. முக்கியமான அறுவை சிகிச்சைகளையெல்லாம் செய்ய முடியவில்லை. C.T. Scan, M.R.I. Scan போன்ற விலையுயர்ந்த மருத்துவ உபகரணங்கள் குளிரூட்டப்பட்ட அறையில்தான் இருக்க வேண்டியிருக்கின்றது. ஆஸ்பத்திரியில் ஏற்கெனவே இரண்டு மின்மாற்றிகள் இருந்துகொண்டிருக்கின்றன. மதுரை மக்கள் 10 ஆண்டுக்காலமாக மூன்றாவது 500 கிலோ வோல்ட் மின்சாரத் திறன் கொண்ட மின் மாற்றியை நிறுவுவதற்கு அரசிடம் கோரிக்கை வைத்தவண்ணம் இருக்கின்றார்கள். ஆகவே, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் விரைவில் 500 கிலோ வோல்ட் திறன் கொண்ட மின்மாற்றியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 15]

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் மனநல மருத்துவமனை இயங்கிக்கொண்டிருக்கிறது. அது சென்னையில் இருக்கின்ற, கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையைப் போன்று முழு வசதியுடன் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு அச்சத்தை, தவறான செய்தியைச் சொல்கிறார்கள் என்று நினைக்கின்றேன். மதுரை அரசு மருத்துவமனைக்குத் தேவையான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கூடுதலாக இப்போது மின்மாற்றிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குத் தேவையான ஜெனரேட்டரும் தற்போது அங்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனநலக் காப்பகம் ஒன்றை தேனி மாவட்டத்தில் தொடங்குவது பற்றி நிதிநிலை அறிக்கையிலே அரசு அறிவித்திருக்கிறது. சென்னை அரசு மனநல மருத்துவமனைக்கு இணையாக தேனி மாவட்டத்திலே புதியதாகத் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் ஆராய்ச்சி மருத்துவ நிலையங்கள் அலோபதி பிரிவு மருத்துவத்திற்கு மட்டும்தானா? நம்முடைய இந்திய வழி மருத்துவத் துறைக்கும் உயர் ஆராய்ச்சி மருத்துவ நிலையங்கள் அமைக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேவேளையிலே, சமீப காலங்களிலே போலி டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, காவல் துறையைச் சார்ந்தவர்களும், மற்ற அதிகாரிகளும் முறையாக இந்திய வழி மருத்துவத் துறையிலே பயிற்சி பெற்ற மருத்துவர்களை அல்லது அதற்காக சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட அமைப்புகளில் அங்கீகாரம் பெற்று கிராமங்களிலே, சிறு நகரங்களிலே மருத்துவப் பயிற்சி செய்து வருகின்ற சித்தா, யுனானி, ஆயுர்வேத டாக்டர்களை மிகவும் கொடுமைப்படுத்துவதாக சமீபத்திலே நான் சென்றிருந்தபோது அந்த மருத்துவர்கள் வந்து புகார் செய்தார்கள். சம்பந்தப்பட்ட துறையிலே முறையான பயிற்சி பெற்று முறையான அங்கீகாரம் பெற்றிருக்கின்ற, இந்திய வழி மருத்துவத் துறையிலே பயிற்சி பெற்றிருக்கின்ற டாக்டர்கள் எந்தவிதமான அச்சுறுத்தலுமின்றி பணியாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக தாம்பரத்தில் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போலி மருத்துவர்கள் என்று கூறி இந்திய மருத்துவப் பயிற்சி பெற்றவர்களை அச்சுறுத்துவதாக இங்கே ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் அலோபதி வைத்தியம் செய்ய முடியாது. சித்த வைத்தியம் படித்தவர்கள் முறையான மருந்தைக் கொடுத்தால் அரசு தடுக்காது. அவர்கள் அலோபதி சிகிச்சையைச் செய்தால் அது தவறாக இருக்கும். அதனால் இதுபோன்று அச்சப்படத் தேவையில்லை. அவர்களுடைய கடமைகளைச் செய்வதற்கு அரசு தடை ஏற்படுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.